


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தேசிய இளைஞர்கள் நிறைவு நாள் நிகழ்ச்சி நாகர்கோவில், ரோட்டரி கம்யூனிட்டி ஹாலில் இன்று (19.01.2017) நடைபெற்றது.

செ.வெ.எண் : 47/2017 நாள்: 19.01.2017

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**தேசிய இளைஞர்கள் நிறைவு நாள் நிகழ்ச்சி**
**இன்று (19.01.2017) நடைபெற்றது.**

இந்தியா அரசு, இளைஞர்கள் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம் மூலம், நேரு யுவகேந்திரா சார்பாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ம் தேதி இளைஞர்கள் நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேசிய இளைஞர்கள் வாரம் ஜனவரி 12 முதல் 19-ம் தேதி வரை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிறைவு நாளான இன்று (19.01.2017) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேசிய இளைஞர்கள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் மற்றும் திறனாய்வு போட்டிகளில் வெற்றிபெற்ற 14 இளைஞர்களுக்கு பாராட்டுச்சான்றிதழ்களும், நினைவு பரிசுகளும், சிறப்பாக செயல்பட்ட 14 இளைஞர்கள் மன்றத்திற்கு நினைவு பரிசுகளும், 2016-ம் ஆண்டு சமூக பணிகளை சிறப்பாக மேற்கொண்ட பனம்கறை, தமிழ் நற்பணி மன்றத்திற்கு ரூ.25 ஆயிரத்திற்கான காசோலைகளை நாகர்கோவில், ரோட்டரி கம்யூனிட்டி ஹாலில் வழங்கி தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் நேரு யுவகேந்திரா மூலம் தேசிய இளைஞர்கள் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியை காண உள்ளுர் மற்றும் அல்லாமல் வெளி நாடு மற்றும் வெளி மாநிலத்திலிருந்து சுற்றுலா பயணிகள் அதிகமாக வருகை தருகிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டுமென்றால் 1896-ம் ஆண்டு டிசம்பர் மாதம் சுவாமி விவேகானாந்தா அவர்கள் கன்னியாகுமரியில் தியானம் செய்தார்கள். அதுமட்டுமல்லாமல், நமது மாவட்டத்தில் சுவாமி விவேகானாந்தா அவர்களின் பாறை அமைந்துள்ளது. இந்த இடமானது சுற்றுலா பயணிகள் அதிகமாக கண்டு களிக்கும் இடமாக அமைந்துள்ளது. இளைஞர்களாகிய நீங்கள்தான் நாளைய எதிர்காலங்களில் உணர்ந்து கொண்டு, தங்களது சமூக பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசு தூய்மை பாரத திட்டத்தின்கீழ், நமது மாவட்டத்தில் 95 ஊராட்சிகளில் ஏற்கெனவே திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்கி உள்ளோம். மேலும் 55 பேரூராட்சிகளில், 42 பேரூராட்சிகளில் இந்த நிலையை அடைந்துள்ளோம். மேலும் மீதியுள்ள 13 பேரூராட்சிகளில் 2 மாதத்திற்குள் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை அடைய, மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதுமட்டுமல்லாமல், நமது மாவட்டத்தில் 4 நகராட்சிகளில் குளச்சல், குழித்துறை, பத்மநாபபுரம் என 3 நகராட்சிகளில் மேற்கண்ட நிலையை அடைந்துள்ளோம். தற்போது நாகர்கோவில்

நகராட்சியில் உள்ள 52 வார்டுகளில் 45 வார்டுகளில் இந்த நிலை அடைந்துள்ளோம். மீதியுள்ள 7 வார்டுகளில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்கியதோடு, அடுத்த 6 மாதத்தில் நமது மாவட்டத்தில் திறந்தவெளி மலம் கழித்தல் இல்லாத நிலையை உருவாக்க செய்ய இளைஞர்களின் ஒத்துழைப்பு வேண்டும்.

எனவே இளைஞர்களாகிய நீங்கள் சமூக பணிகளை சிறப்பாக மேற்கொள்வதோடு, விளையாட்டுப்போட்டிகள், கல்வி ஆகியவற்றிற்கு உங்களுடைய முழு பங்களிப்பு அரசாங்கத்திற்கு இருந்தால், நிச்சயமாக இந்த நாடு சிறந்த நிலையை அடைய முடியும் என தெரிவித்தார். முன்னதாக சுவாமி விவேகானாந்த அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்.

நிகழ்ச்சியில் நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், நேரு யுவகேந்திரா ஒருங்கிணைப்பாளர் திரு. தினேஷ்குமார் மற்றும் இளைஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.